



# சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை

மானிய கோரிக்கை எண் - 45

## அறிவிப்புகள் 2022 - 2023


**திருமதி பி. கீதா ஜீவன்**

சமூக நலன்-மகளிர் உரிமைத் துறை அமைச்சர்

# சமூக நலன்
# மற்றும்
# மகளிர் உரிமைத் துறை

## மானியக் கோரிக்கை எண். 45

## அறிவிப்புகள்
## 2022 - 2023


**திருமதி பி. கீதா ஜீவன்**

சமூக நலன்-மகளிர் உரிமைத் துறை அமைச்சர்

1. 112.83 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 2,100 அரசு பள்ளி சத்துணவு மையங்களுக்கு ஊரக வளர்ச்சித் துறையின் மூலம் வைப்பறையுடன் கூடிய சமையலறைகள் கட்டப்படும்.

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் சத்துணவுத் திட்டத்தின் கீழ் 43,190 சத்துணவு மையங்கள் செயல்பட்டு வருகின்றன. அவற்றில் 29,002 மையங்களுக்கு வைப்பறையுடன் கூடிய சமையலறைகள் உள்ளன. 2021-2022-ஆம் ஆண்டில் 69 கோடி ரூபாய் செலவினத்தில் 1,291 வைப்பறையுடன் கூடிய சமையலறைகள் கட்டுவதற்கு ஆணைகள் வெளியிடப்பட்டு, கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இதன் தொடர்ச்சியாக 2,100 பள்ளி சத்துணவு மையங்களுக்கு 112.83 கோடி ரூபாய் மதிப்பீட்டில் வைப்பறையுடன் கூடிய சமையலறைகள் ஊரக வளர்ச்சித் துறையின் மூலம் நடப்பு நிதியாண்டில் கட்டப்படும்.

**2. மூத்த குடிமக்கள் நலனுக்காக சமூக நல இயக்ககத்தில் தனி அலகு ஒன்று உருவாக்கப்படும்.**

தமிழ்நாட்டில் தற்போது 75 இலட்சமாக உள்ள மூத்த குடிமக்களின் எண்ணிக்கை 2031-ஆம் ஆண்டு 1.42 கோடியாக உயரும் என்று எதிர்நோக்கப்படுவதால் பெருகி வரும் மூத்தக் குடிமக்களின் நலன், பாதுகாப்பு, சுகாதாரம், ஊட்டச்சத்து போன்ற சேவைகளை வழங்குவதற்கும் அவர்களுக்காக செயல்படுத்தப்படும் திட்டங்களை சிறப்பாக நிர்வகிக்கும் பொருட்டு சமூக நல இயக்ககத்தில் தனி அலகு ஒன்று உருவாக்கப்படும்.



**3. சமூக நலன், சமூக பாதுகாப்பு மற்றும் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம் ஆகியவற்றின் கீழ் செயல்படுத்தப்படும் திட்டங்கள் மற்றும் உலக வங்கி உதவியுடன் செயல்படுத்தப்படும் திட்டங்களை ஒருங்கிணைத்து கண்காணிப்பதற்காக தலைமைச் செயலகத்தில் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறையில் திட்ட மேலாண்மை அலகு ஒன்று ஏற்படுத்தப்படும்.**

சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறையில் செயல்படுத்தப்படும் திட்டங்களில் ஏற்படும் இடர்பாடுகளை களைதல், திட்டத்தின் நோக்கம் மற்றும் திட்டத்தின் இலக்கை எய்துவதற்கான வழிவகை செய்தல், மாறி வரும் கால சூழலுக்கேற்பவும் பயனாளிகளின் தேவைக்கேற்பவும் திட்டங்களை மாற்றி அமைத்தல், திட்டத்தின் வெற்றித்தோல்வியை உறுதி செய்வதற்கு மீள் தரவுகள் சேகரித்தல், திட்டத்தின் வெளிப்பாடு மற்றும் துறையின் கீழ் செயல்படுத்தப்பட்டு வரும் நலத் திட்டங்களுடன் உலக வங்கி உதவியுடன் செயல்படுத்தப்படும் திட்டங்களையும் ஒருங்கிணைத்து மேலாண்மை செய்வதற்கு ஏதுவாக தலைமைச் செயலகத்தில் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறையில் திட்ட மேலாண்மை அலகு ஒன்று ஏற்படுத்தப்படும்.

4. மூத்தக்குடிமக்களுக்கான ஒருங்கிணைந்த வளாகம் கட்டுவதற்கு ஒரு கோடி ரூபாய் மதிப்பீட்டில் விரிவான சாத்தியக்கூறாய்வு மேற்கொள்ளப்படும்.

தமிழ்நாட்டில் தற்போது உயர்ந்து வரும் மூத்தக் குடிமக்களின் ஒட்டு மொத்த நலனுக்காக பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்படுகிறது. சமூகத்தின் நடுத்தர மற்றும் உயர் நடுத்தர வர்க்கப் பிரிவைச் சேர்ந்த மூத்த குடிமக்களுக்கு, பாதுகாப்பான, வசதியான, நியாயமான மற்றும் பாதுகாப்பான தங்குமிடத்தினை ஏற்படுத்தி தருவதற்காக காஞ்சிபுரம் மாவட்டம், துண்டல்கழனி கிராமத்தில் அமைந்துள்ள 4.00 ஹெக்டேர் நிலப்பரப்பில் அமைக்கப்பட இருக்கும் மூத்தக் குடிமக்களுக்கான ஒருங்கிணைந்த வளாகம் அமைப்பதற்கான வடிவமைப்பு, செலவின மதிப்பீடுகளுடன் உகந்த கருத்து வடிவமைப்பினை உருவாக்கும் பொருட்டு விரிவான சாத்தியக் கூறாய்வு ஒரு கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.



5. வன்முறையால் பாதிக்கப்படும் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு உறுதுணையான சேவைகள் அனைத்தையும் ஓரிடத்தில் வழங்கிட பத்து மாநகராட்சிகளில் 11.00 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஒருங்கிணைந்த சேவை மையங்கள் அமைக்கப்படும்.

சமூகத்தில் நிலவும் பாலின பாகுபாடு, பொருளாதார பின்னடைவு காரணமாக குழந்தைகள் விற்பனை, குழந்தை திருமணங்கள், குடும்பத்தில் கடன் சுமை காரணமாக தம்பதியினர் தற்கொலை, குழந்தைகளையும் சேர்த்து கொலை செய்தல், வரதட்சணை கொலைகள், பாலின ரீதியில் குழந்தைகளும், பெண்களும் வன்கொடுமைக்கு ஆளாவது, இணையதள குற்றங்கள் போன்ற குற்றங்கள் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கெதிராக தொடர்ந்து அதிகரித்து வருகிறது.

இத்தகைய குற்றங்களை தவிர்ப்பதற்கு குடும்பங்களுக்கு மனநல ஆலோசனை, வன்முறையால் பாதிக்கப்பட்டவருக்கு தேவையான மருத்துவ வசதி, ஆற்றுப்படுத்துவதற்கான ஆலோசனைகள், சட்ட ரீதியான பாதுகாப்பு மற்றும் நிவாரணம் பெற்று தருதல் ஆகியவற்றை ஓரிடத்தில் வழங்குவதற்காக மதுரை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, சேலம், திருநெல்வேலி, திருப்பூர், தூத்துக்குடி, ஆவடி, ஓசூர் மற்றும் திண்டுக்கல் ஆகிய பத்து மாநகராட்சிகளில் ஒரு சேவை மையத்திற்கு ரூ.1.10 கோடி வீதம் பத்து ஒருங்கிணைந்த சேவை மையங்கள் 11.00 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும்.



**6. தமிழ்நாட்டில் பாலினம் குறித்த நிதி நிலை அறிக்கையை உறுதி செய்வதற்காக அனைத்துத் துறைகளிலும் பாலின வரவு செலவு திட்டம் உருவாக்கப்படும்.**

2022-2023-ஆம் நிதியாண்டு முதல் பாலின நிதி நிலை அறிக்கையை உறுதிபடுத்துவதற்காகவும், பாலினம் சார்ந்த கொள்கைகளை உருவாக்கி அதன் செயல்பாடுகள் மற்றும் திட்டங்களில் முன்னுரிமை அளிப்பதற்காகவும், அனைத்து துறைகளிலும் பாலின வரவு செலவு திட்டம் உருவாக்கப்படும்.

7. இரத்த சோகையை தடுக்க 19 மாவட்டங்களில் தன் சுத்தம், குடற்புழு நீக்கம், கை கழுவுதல் உள்ளிட்ட விரிவான தீவிர விழிப்புணர்வு இயக்கத்தை 4.75 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நடத்தப்படும்.

குழந்தைகளிடையே ஏற்படும் இரத்தசோகை குறைபாடுகள் அதன் வளர்ச்சியை அதிக அளவில் பாதிப்பினை உண்டாக்கும். சமீபத்திய தேசிய குடும்ப நல சுகாதார ஆய்வு 5ன் கணக்கெடுப்பின்படி தமிழ்நாட்டிலுள்ள 19 மாவட்டங்களில் 6 மாதம் முதல் 59 மாதம் வரையிலான குழந்தைகளிடையே மாநில சாராசரியை விட அதிக அளவில் இரத்தசோகை குறைபாடு இருப்பது கண்டறியப்பட்டுள்ளது.

இதனை தவிர்த்திட மிக எளிமையான வழிமுறைகளான கைகளை சுத்தமாக வைத்திருத்தல், நகங்களை வளரவிடாமலிருத்தல், கைகளை முறையாக கழுவுதல், தன் சுத்தம் பேணுதல் போன்ற நற்பழக்கங்களை குழந்தைகள்



மற்றும் பெற்றோர்களிடையே ஏற்படுத்துவதற்காக 19 மாவட்டங்களில் நடமாடும் ஊர்திகள், தெருமுனை விழிப்புணர்வு நாடகங்கள், பொம்மலாட்டம், குறும்படங்கள் போன்ற தகவல் தொடர்பு நடவடிக்கைகள் வாயிலாக விரிவான தீவிர விழிப்புணர்வு இயக்கத்தை 4.75 கோடி ரூபாய் செலவினத்தில் நடத்தப்படும்.

8. ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்ட பணிகள் வழங்கும் சேவைகள் பயனாளிகளை சென்றடைவதை கண்காணிக்கும் பொருட்டு 1.50 கோடி ரூபாய் செலவினத்தில் கணினிமயமாக்கப்பட்ட பயனாளிகள் சேவை மையம் அமைக்கப்படும்.

ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டத்தின் கீழ் செயல்படும் குழந்தை மையங்கள் மூலம் பயனாளிகளுக்கு சத்துமாவு மற்றும் மதிய உணவு வழங்குதல், சுகாதார கல்வி அளித்தல் போன்ற சேவைகள் பயனாளிகளுக்கு சரியான முறையில் சென்றடைந்துள்ளதை உறுதிப்படுத்தவும் அவர்களுக்கு தேவையான சுகாதாரம் மற்றும் ஊட்டச்சத்து பற்றி தகவல்கள் தொழில்நுட்ப உதவி வாயிலாக வழங்குவதற்கும் 1.50 கோடி ரூபாய் செலவினத்தில் பயனாளிகளுக்கான கணினிமயமாக்கப்பட்ட சேவை மையம் ஒன்று அமைக்கப்படும்.



9. மகப்பேறு மருத்துவமனைகள் மற்றும் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்ட மையங்களில் குழந்தைகளின் முதல் 1,000 நாட்கள் குறித்த விழிப்புணர்வை 1.74 கோடி ரூபாய் செலவினத்தில் ஏற்படுத்தப்படும்.

குழந்தைகளின் சீரான மன மற்றும் உடல் வளர்ச்சிக்கு கருவுற்ற காலத்திலிருந்து குழந்தையின் 2 வயது வரையிலான 1,000 நாட்களின் முக்கியத்துவம் குறித்து விழிப்புணர்வினை கர்ப்பிணி மற்றும் தாய்மார்களுக்கு கொண்டு செல்வது. தமிழ்நாட்டிலுள்ள அனைத்து மகப்பேறு மருத்துவமனைகளிலும் 1,000 நாட்கள் குறித்து விழிப்புணர்வு செய்திகளை காட்சிப்படுத்துதல், இதன் முக்கியத்துவம் குறித்து கையேடுகள் அனைத்து மகப்பேறு மருத்துவமனைகளுக்கும் விநியோகித்தல் போன்ற விழிப்புணர்வு நடவடிக்கைகள் 1.74 கோடி ரூபாய் செலவினத்தில் ஏற்படுத்தப்படும்.

இந்த விழிப்புணர்வின் மூலம் குழந்தைகளின் சீரான வளர்ச்சி உறுதி செய்வதுடன் குழந்தைகளிடையே ஏற்படும் வளர்ச்சி குறைபாடுகளான குள்ளத்தன்மை, எடைகுறைவு, மெலிவுத்தன்மை மற்றும் அதிக எடை போன்றவை தவிர்க்கப்பட்டு ஆரோக்கியமான குழந்தைகள் வளர்வதை உறுதி செய்யப்படும்.



**10. எடை குறைவுடன் பிறக்கும் குழந்தைகளை கண்காணித்திட 85.00 இலட்சம் ரூபாய் செலவினத்தில் 1,000 எண்ணிக்கையிலான மின்னணு தொழில்நுட்ப வளர்ச்சிக் கண்காணிப்பு கருவிகள் வழங்கப்படும்.**

சென்னை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, மதுரை மற்றும் தூத்துக்குடி ஆகிய மாநகராட்சிகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட 1,000 குழந்தைகள் நல மையங்களுக்கு எடைக் குறைவுடன் பிறக்கும் குழந்தைகளின் எடையினை சீரிய இடைவெளியில் கண்காணித்து, அக்குழந்தைகள் சரியான எடை அளவினை எட்டும் வரை, கண்காணித்து உரிய ஊட்டச்சத்து அளிக்க நடவடிக்கை எடுப்பதற்காக 85.00 இலட்சம் ரூபாய் செலவினத்தில் மின்னணு தொழில் நுட்பத்துடன் கூடிய வளர்ச்சிக் கண்காணிப்புக் கருவிகள் வழங்கப்படும்.

பிறக்கும்போதே எடை குறைவுள்ள குழந்தைகளை கண்டறிந்து அக்குழந்தைகளின் மீது தனிக்கவனம் செலுத்துவதால், குழந்தைகளுக்கு ஏற்படும் எதிர்மறையான விளைவுகள் முறியடிக்கப்படுவதுடன், வரையறுத்துள்ள எடையளவு எட்டும் விதத்தில் தேவையான ஊட்டச்சத்து அளிக்கப்படும். இதன் மூலம் குழந்தைகளின் இறப்பு விகிதம் குறைவதோடு, அவர்களின் சரியான எடையளவும் உறுதி செய்ய ஏதுவாகும்.



**11. செங்கல்பட்டு மாவட்டத்தில் குழந்தைகளுக்கான 'பாதுகாப்பு இல்லத்திற்கான" புதிய கட்டடம் 15.95 கோடி ரூபாய் செலவினத்தில் கட்டப்படும்.**

16 வயதிலிருந்து 18 வயதிற்குள் சட்டத்திற்கு முரணாக செயல்பட்டதாக கருதப்படும் குழந்தைகள் மற்றும் 18 வயதிற்குள் சட்டத்திற்கு முரணாக செயல்பட்ட 18 வயதை கடந்தவர்கள் ஆகியோரை தங்க வைப்பதற்கான 'பாதுகாப்பு இல்லம்" ஏற்படுத்துதல் மிகவும் அவசியமாகும். இப்பாதுகாப்பு இல்லத்தில் இவ்வகையான சட்டத்திற்கு முரண்பட்ட குழந்தைகளின் மறுசீராக்க நடவடிக்கைகளுக்கு உகந்த சூழலுடன் முறை மற்றும் முறைசாராக் கல்வி, தொழிற்பயிற்சி, தீவிர ஆற்றுப்படுத்துதல், ஒழுக்கம் சார்ந்த வகுப்புகள், வாழ்க்கை திறன் பயிற்சிகள் போன்ற சேவைகளும் வழங்கப்படுகின்றன. இக்குழந்தைகள் சட்டத்திற்கு முரணான செயலில் மீண்டும் ஈடுபடுவதைத் தடுத்து அவர்களை

சமூகத்தில் பயனுள்ள குடிமக்களாக உருவாக்குவதற்கு செங்கல்பட்டு மாவட்டத்தில் குழந்தை பாதுகாப்பு சேவைகள் திட்டத்தின் கீழ் வரையறுக்கப்பட்டுள்ளவாறு அனைத்து நவீனமயமாக்கப்பட்ட உட்கட்டமைப்பு வசதிகளுடன், 100 குழந்தைகள் தங்கும் திறன் கொண்ட 'பாதுகாப்பு இல்லத்திற்கான' ஒரு புதிய கட்டடம் 15.95 கோடி ரூபாய் செலவினத்தில் கட்டப்படும்.



**12. சென்னை மாவட்டத்தில் கூடுதலாக மாவட்ட குழந்தை பாதுகாப்பு அலகு ஒன்றை 68.53 இலட்சம் ரூபாய் செலவினத்தில் அமைக்கப்படும்.**

குழந்தை பாதுகாப்பு சேவைகள் திட்ட வழிகாட்டுதல் மற்றும் இளைஞர் நீதிச் (பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டம் 2015 ன்படி, பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு தேவைப்படும் குழந்தைகள் மற்றும் சட்டத்திற்கு முரணாக செயல்படும் குழந்தைகளுக்கு உணவு, உடை, கல்வி, மருத்துவ உதவி மற்றும் இருப்பிடம் போன்ற அடிப்படை வசதிகள் வழங்குவதை உறுதி செய்வதற்கு மாவட்ட குழந்தை பாதுகாப்பு அலகு ஒவ்வொரு மாவட்டத்திலும் செயல்படுகின்றன.

சென்னை மாவட்டத்தில் அதிக அளவில் குழந்தை பராமரிப்பு நிறுவனங்கள் உள்ளதால் அவற்றை கண்காணிக்கவும், அனைத்து குழந்தைகளுக்கும் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு சேவைகளை உரிய நேரத்தில் வழங்குவதற்கு சென்னை மாவட்டத்தில் கூடுதலாக மாவட்ட குழந்தை பாதுகாப்பு அலகு ஒன்று 68.53 இலட்சம் ரூபாய் செலவினத்தில் அமைக்கப்படும்.

13. மாற்று கருவறை தாய் மூலம் குழந்தைகள் பெற்று பராமரிக்கும் அரசு பெண் பணியாளர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு 270 நாட்கள் குழந்தை பராமரிப்பு விடுப்பு வழங்கப்படும்.

மாற்று கருவறை தாய் மூலம் குழந்தைகள் பெறுவது தற்போது அதிகரித்து வருகிறது. அவ்வாறு மாற்று கருவறை தாயின் மூலம் குழந்தைகளை பெறும் அரசு பெண் பணியாளர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு, பச்சிளம் குழந்தைகளை மிகுந்த கவனத்துடன் பராமரிப்பதுடன் அவர்களின் உடனடி தேவைகளை நிறைவேற்றுவதற்காக 270 நாட்கள் குழந்தை பராமரிப்பு விடுப்பு வழங்கப்படும்.



14. தமிழ்நாட்டில் குழந்தைகள் இல்லங்கள் அதிகளவில் உள்ள ஆறு மாவட்டங்களில், அவ்வில்லக் குழந்தைகள் பயன்பெறும் வகையில் வாழ்வியல் வழிகாட்டு மையங்கள் 48.24 இலட்சம் ரூபாய் செலவினத்தில் அமைக்கப்படும்.

இளைஞர் நீதி சட்டத்தின் கீழ் இயங்கும் நிறுவனங்களில் அனுமதிக்கப்படும் குழந்தைகளுக்கு பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு வழங்கி அவர்கள் 18 வயது நிறைவடையும் நிலையில் நிறுவனங்களிலிருந்து வெளியேற்றப்படுகின்றனர். இவ்வயதில் இவர்கள் அதிகபட்சமாக கல்லூரியின் முதலாமாண்டு மட்டுமே படிக்க இயலும். இவர்களுக்கு தொடர் கண்காணிப்பு, பயிற்சி மற்றும் தேவையான உதவி வழங்கி, வேலை வாய்ப்பிற்கு வழிகாட்டி, சமுதாயத்தில் தன்னிறைவு அடையும் பொருட்டு நிலையான எதிர்காலத்தை அமைத்துக் கொடுப்பது மிகவும் அவசியமாகும்.

குழந்தைகள் இல்லங்கள் அதிகளவில் உள்ள சென்னை, தூத்துக்குடி, தஞ்சாவூர், சேலம், மதுரை மற்றும் கோயம்புத்தூர் ஆகிய 6 மாவட்டங்களில் அவ்வில்லக் குழந்தைகளின் திறன்களை கண்டறிந்து வாழ்வியலுக்குத் தேவையான பயிற்சி, திறன் மேம்பாடு, போட்டித் தேர்வுகளுக்கு தயார்படுத்துதல், வேலை வாய்ப்பிற்கு வழிகாட்டுதல் ஆகியவற்றை மேற்கொள்ள, பணியிடங்களுடன் கூடிய வாழ்வியல் வழிகாட்டு மையங்கள் 48.24 இலட்சம் ரூபாய் செலவினத்தில் அமைக்கப்படும்.

**திருமதி பி. கீதா ஜீவன்**

**சமூக நலன்-மகளிர் உரிமைத் துறை அமைச்சர்**